**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் மீது இந்த அறிக்கையிலுள்ள 1.6.1(அ) இலுள்ள என்னுடைய அவதானிப்பு தொடர்பில் செய்யப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி நிதிக்கூற்றுகளின் (படிவம் SA 82) பிரகாரம், ரூபா 37,967,000 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்கள் திணைக்களத்திற்கு உடமையாக உள்ளதென காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திணைக்கள ஏடுகள் மற்றும் நிலையான சொத்து பதிவேடுகளின் பரீட்சிப்பின் போது வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான ரூபா 12,900,000 பெறுமதியான 5 மோட்டார் வாகனங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக, திணைக்கள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் உண்மைத் தன்மை பற்றிய கணக்காய்வில் திருப்தியளித்திருக்கவில்லை. | திணைக்களம் அந்த வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கின்றது. | திணைக்கள நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்கள மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டில் சரியாகப் பதியப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றிலுள்ள நிதியலல்லா சொத்துக்களின் கீழான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 73,560,677 ஆக இருந்தது. எவ்வாறாயினும், திறைசேரி நிதிக்கூற்றுகளின் (படிவம் SA 82) பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாச் | 2022 மார்ச் மாதத்திற்காக பொழிப்பு கணக்குகள் மூலம் திருத்தப்பட்டிருந்தது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த பெறுமதி படிவம் SA 82 இல் காட்டப்பட வேண்டும். |

சொத்துக்களின் பெறுமதி ரூபா 72,077,297 ஆக இருந்தது. எனவே, ரூபா 1,483,380 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் சில பதிவேடுகள் திணைக்களத்தால் பேணப்பட்டிருக்காததுடன் அவற்றில் சில முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாகனப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 1646(உ) இன் பிரகாரம், திணைக்களத்திற்கு சொந்தமான அந்த வாகனங்களின் விபரங்களைக் கொண்டிருக்கின்ற வாகனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது வாகனப் பதிவேடு தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 1646(உ) இல் குறிப்பிடப்பட்ட விபரங்களைக் கொண்டிருக்கின்ற வாகனப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| **(ஆ) வாகன சம்பவ குறிப்பு புத்தகம்** | | |
| வாகனச் சம்பவக் குறிப்பு புத்தகம் பேணப்பட்டு நிதிப்பிரமாணம் 1646(ஆ) இன் பிரகாரம், நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனச் சம்பவக் குறிப்பு புத்தகம் திருத்தம் செய்யப்பட்டு நாளதுவரையாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | வாகனச் சம்பவக் குறிப்பு புத்தகம் முறைப்படி பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பொது மூலதன செலவினத்திற்காக பெறப்பட்ட தேறிய ஏற்பாடு ரூபா 2,713 மில்லியனாக இருந்ததுடன் தேறிய செலவினம் ரூபா 975.4 மில்லியனாக இருந்தது. எனவே, ரூபா 1,737.6 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. இதன்படி, தேறிய ஏற்பாட்டின் சேமிப்பு 64 சதவீதமாக இருந்தது. | போதிய நிதிகள் இல்லாமை, நிலவிய கெரோணா தொற்று நோய் காரணமாக செயற் திட்டங்கள் அமுலாக்கலிற்கான இடையூறுகள் மற்றும் அலுவலகத்தை மூடுதல் என்பன இதற்கான காரணமாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 332-1-01-1703 ஆம் செலவின தலைப்பின் கீழ் பெறப்பட்ட தேறிய ஏற்பாடு முழுவதும் திருப்பி அனுப்பப்பட்டது. | நிலவிய கொரோணா தொற்று நோய் காரணமாக பயிற்சி நிகழ்ச்த்திட்டங்கள் நடாத்தப்படாது இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மூன்று செலவின விடயங்களிற்காக செலவினங்களை செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 13.88 மில்லியன் ஒதுக்கீட்டில் 18 சதவீதம முதல் 47 சதவீதம் ரையான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 அளவில் விலைப் பட்டியல் சமர்ப்பிக்காமை, கொரோணா நோய் தொற்று காரணமாக அலுவலகம் மூடியிருந்தமை, என்பவ்றால் இந்த ஏற்பாடுகள் திருப்பியனுப்பபட்டிருந்தன. | -மேற்படி- |
| (இ) | ஐந்து மூலதன செலவின விடயங்களிற்காக பெறப்பட்ட ரூபா 2,708.15 மில்லியன் ஒதுக்கீட்டில் 44 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தது. | செலவின மீளமைப்பு, போதிய நிதிகள் இல்லாமை, நிலவிய கெரோணா தொற்று நோய மற்றும் விலைப் பட்டியல் சமர்ப்பிக்காமை போன்ற காரணமாக ஏற்பாடுகள் திருப்பியனுப்பப்பட்டிருந்தன. | -மேற்படி- |

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை நிதிப்பிரமாணங்களின் 137(2) மற்றும் (3) மற்றும 38(4) ஆம் பிரிவுளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு முரணாக 16 நடவடிக்கைகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் கம்பஹா மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட போதிலும் அசுனி சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு ரூபா 904,470 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | புலனாய்வுகள் நடாத்தப்பட்ட பின்னர் பதில்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தங்கள் தொடர்புபட்ட கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைய செயற்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை கிழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்பு இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் உபபிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து திணைக்கள வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவிலை | 2021 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 570 | இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் இருக்கின்ற ரூபா 29,975,174 கூட்டுத் தொகையான 471 வைப்புக்களை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகள் பின்நோக்கி இருக்கின்ற முன்னைய ஆண்டு களிலிருந்து நிறுத்தி வைத்திருக்கின்ற கோரப்படாத நிதிகள் மற்றும் செயற் திட்டங்களின் மிகுதி நிதிகள் 2022 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வைப்புகள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணங்கள் 104(3) மற்றும் 104(4) | அநுராதபுரம் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் 2018 நவம்பர் 10 இல் நிகழ்ந்த விபத்து தொடர்பில் நட்டங்களின் நிர்ணயம் மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பித்தல் என்பன 2022 ஏப்ரல் 20 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவிலை. | நிதிப்பிரமாணங்களிற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | நிதிப்பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 109 | 2018 இல் நுவரெலியா அலுவலகத்தில் கணனி உபகரணங்களின் இழப்பு தொடர்பான இழப்புகள் 2022 மார்ச் 31 வரையும் கணக்கு ஏடுகளிலிருந்து பதிவழிக்கப் பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு ஒதுகீடு பெற்ற பின்னர் இது செயற்படுத்தப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) நிதிப்பிரமாணம் 133 | மீளாய்வாண்டு இறுதி வரையும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப் பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிப்பதற்கும் உள்ளக கணக்காய்வாளர் நியமிப்பதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (v) நிதிப்பிரமாணம் 394(ஈ) | மீளாய்வாண்டு இறுதி வரையும் 06 மாதங்களிற்கு மேல் காசாக்கப்படாமல் இருந்த ரூபா 102,815 பெறுமதியான பத்து காசோலைகள் நிதிப் பிரமாணங்களிற்கு அமைய இரத்து செய்யவோ அல்லது புதிய காசோலைகள் வழங்கவோ செய்யப் பட்டிருக்கவில்லை. | தற்போது அந்த சகல காசோலைகளும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (vi) நிதிப்பிரமாணம் 137(8) | தன்னவல நீர் வழங்கல் திட்டத்தின் சீரற்ற நிலத்தின் மண் நிரப்பலிற்காக தன்னவல நிதியவல லயன் விவசாயிகள் அமைப்பிற்கு இறுதி விலை பட்டியலிற்கான இறுதி கொடுப்பனவு 2019 திசெம்பர் 31 இல் முழுக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் ஒப்பந்தகாரருக்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 176,723 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப் பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 27 இல் திணக்கள கணக்கிற்கு ரூபா 176,723 ஆன தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

(இ) **அரச நிதிச் சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பிரிவு | 2020 ஆண்டில் உள்ளடக்கப்பட்ட சபை கணிப்பீட்டு சபையின் 47 அறிக்கை பிரகாரம் அழிக்கப்படவோ அல்லது திருத்தப்படவோ | 2021 சபை கணிப்பீட்டு சபை அறிக்கை பெற்ற பின்னர் இது பூர்த்தியாக்கப்படும். | அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இனங்காணப்பட வேண்டிய மாத்தளை, கொழும்பு, புத்தளம், மாத்தறை மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள பொருட்கள் தொடர்பில் 2022 மார்ச் 31 இறுதி வரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் பட்டிருக்கவில்லை | | |
| (ii) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | -பிரிவு 3.1 | கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது திணைக்களத் தலைவர் மற்றும் அப்பகுதி பிரதேச செயலாளர் என்போரால் குறிப்பிடப்பட்ட இரண்டு பிரதிநிதிகளைக் கொண்ட மூன்று உறுப்பினர் குழுவால் தகைமைகள் ஆய்வு செய்த பின்னர் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் வழங்கப் பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டங்களிலிருந்து நலன்பெறுகின்ற திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| | - பிரிவு 3.2 (iv) | கொள்வனவு நடவடிக்கைகள் வழங்கிய பின்னர் உரிய அமைப்புகள் உப ஒப்பந்த காரர்களிற்கு சில வேலை விடயங்களை கையளித்திருந்தது. | சமுதாய அடிப்படை அமைப்பகளிற்கு கையளிக்கப்பட்ட நிர்மாணங்கள் சம்பந்தப்பட்ட விடய அறிவுடன் தொழில் நுட்பவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | **பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்**<br>---------------------------- | | | |
| (i) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவு | திணைக்களத்திற்காக திணைக்கள மனிதவளத் திட்டம் தயரிக்கப்பட்டு மீளாய்வண்டு இறுதி வரையும் | தற்போது 2021/2022 ஆம் ஆண்டிற்காக மனித வள அபிவிருத்தி திட்டம் தயரிக்கப் பட்டிருந்தது. | பொது நிர்வாச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கிமீ தூரம் ஓடிய பின்னர் அல்லது பிரதான இன்சின் பழுதுபார்த்த பின்னர் பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது திணைக்களத்திற்கு உடமையான வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிலைய பொறுப்பதிகாரி அலுவலர்கள் சாத்தியமானளவு விரைவில் எரிபொருள் நுகர்ரை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தனர். | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு திணைக்களம் தாபித்து ஏறத்தாழ ஆறு ஆண்டுகளின் பின்னர் முகாமைத்துவம் மீளாய்வாண்டு இறுதிவரையும் திணைக்களத்தை தாபிப்பதற்கான அதிகாரசட்டத்தை அனுமதிப்பதற்கு தவறியிருந்தது. இதன் விளைவால், இதன்கீழ் பதிவு செய்ப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளை நெறிப்டுத்துவதற்கு அதிகாரத்தை போல திணைக்களத்தின் சட்ட வலு அனுமத்தல் கணக்காய்வில் தொடர்திருந்தன. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தை தாபிப்பதற்கு உரிய சட்டத்தை அனுமதிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 எதிர்பாரக்கப்பட்ட வெளியீட்டை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இராஜாங்க அமைச்சால் அமுலாக்கப்பட்ட நனோ தண்ணீர் சுத்திகரிப்பு முறைமை நிர்மாணிப்பதற்கான செயற் திட்டத்திற்காக ரூபா 49.5 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் உரிய மதிப்பீடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு சகல கொடுப்பனவுகளும் செய்யப்பட்டிருந்தது. ஏவ்வாறாயினும், செல்லாப்பட்ட நனோ சுத்திகரிப்பு முறைமைகளிற்காக மின்சாரம் பெறத்தவறியமையால் 2022 சனவரி இறுதிவரையும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை பெறுவதற்கு தவறியிருந்தது. | மின்சார சபையை வேலையை விரைவுபடுத்துவற்கு அறிவித்திருந்த போதிலும் தேவையான உபரணங்கள் குறைவாக உள்ளதென தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த 30 இயந்திரங்களிற்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. | உரிய காலத்திற்குள் செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த நலன்களை பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 பூர்த்தியாக்கப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 23 மாவட்டங்களில் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளின் முன்னூற்றி பதினொரு (311) நீர் செயற்திட்டங்கள் 2000 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையும் செயற்படாதிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் மட்டக்களப்பு, நுவரெலியா, பதுளை, புத்தளம், மொனறாகலை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் செயற்படாதிருந்த செயற்திட்டங்களை மீளச் செயற்படுத்துவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பல செயற்திட்டங்கள் 4 தலை முறைகளாக செயற்படாது இருந்தது, அந்த சகல செயற்திட்டங்களையும் ஒரு வருடத்திற்குள் புனரமைப்பது சாத்தியமற்றிருந்தது. | செயற்படுத்தப்படாத மற்றும் மீளச் செயற்படுத்த கூடியதாக செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) கிளிநொச்சி, கேகாலை, காலி, வவுனியா மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு சொந்தான செயற்திட்டங்கள் மின்சார பட்டியல் கொடுப்பனவு செய்யாமை, தண்ணீர் மீட்டர்கள் இயக்கப்படாமை மற்றும் முறையான முகாமைத்துவம் இன்மை போன்றமையால் செயற்படாதிருந்தமை | -மேற்படி- | -மேற்படி- |

அவதானிக்கப்பட்டது.
எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அவற்றினை மீளச் செயற்படுத்த மற்றும் பரீட்சாத்தமாக தொடங்குதல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரஜாஜல அபிமானி செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட 275 செயற் திட்டங்களில் 105 செயற் திட்டங்களின் முன்னேற்றம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறன 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உரிய நேரத்தில் நிதிகள் கிடைக்காமை, கொரோணா நோய் தொற்று காரணமாக வேலைத் தளங்களிற்கு செல்ல இயலாமை, பல தடவைகள் கேள்விகள் மீள கோரப்பட்டமை, நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை போன்றவற்றால் செயற் திட்டங்களின் பூர்த்தியாக்கல் தாமதப்பட்டிருந்தது. | திட்டமிட்டவாறு செயற் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது தேசிய பிரஜா ஜல அபிமானி செயற் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட ரூபா 603.15 மில்லியன் கிரயத்திலான 81 செயற் திட்டங்களில் ரூபா 591.96 மில்லியன் கிரயத்திலான எழுபத்தியாறு (76) நீர்ச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கபடாமல் இருந்ததுடன் மட்டக்களப்பு, முல்லைத்தீவு, குருநாகல், கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் ரூபா 43.15 மில்லியன் கியத்தில் அமுலாக்கப்பட்ட 06 நீர் செயற் திட்டங்களின் முன்னேற்றம் மீளாய்வாண்டு இறுதியில் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான மிகவும் குறைவான வீச்சில் இருந்தது. மேலும், காலி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 2019 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்திட்டத்தின் கீழ் தொடங்க ப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டவை மீளாய்வாண்டு இறுதிவரையும் ஐந்து | மேற்குறித்த (அ) இல் குறிப்பிடப்பட்ட காரணங்கள் காரணமாக செயற்திட்டங்கள் தாமதமான போதிலும் திஸ்ஸகோம புவுடு சமுதாய செயற்திட்டத்தின் கீழ் 300 குடும்பங்கள், எல்பிட்டிய குலன்கண்ட செயற்திட்டத்தின் கீழான 30 குடும்பங்களிற்கான நீர் இணைப்புகள் மற்றும் நாகோடை கப்பிட்டியகொட ஜின் சோப செயற்திட்டத்தின் கீழான 82 நீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தது. தவலமா, கலன்டர செயற்திட்டத்தில் குழாயிடல் வேலைகளிற்கு இடையேயான நடைமுறைச் பிரச்சனைகள் காரணமாக தூரம் வரயறுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நீர் செயற் திட்டங்கள் பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்தது. | | |
| (இ) | தண்ணீர் தரத்தினை முன்னேற்றுவதற்கு ஆண்டின் இறுதிக்கு முன்னர் பூர்த்தியாக்க வேண்டுமென மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் அமுலாக்கப்பட்ட ரூபா 101 மில்லியன் கிரயத்திலான 21 செயற்திட்டங்களில் கம்பஹா, புத்தளம், களுத்துறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தெரிவுசெய்த 16 கிராம சேவகர் பகுதிகளை மேவி அமுலாக்கப்பட்ட ரூபா 72.7 மில்லியன் கிரயத்திலான பதினாறு (16) செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 16 மில்லியன் மதிபீட்டுக் கிரயத்தில் ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட 04 செயற் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான மிகவும் குறைவான வீச்சில் இருந்தது. | 21 செயற்திட்டங்களில் 18 செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | கிராமிய அமைச்சு மற்றும் பிரதேச குடி தண்ணீர் அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் அமுலாக்கப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 286.95 மில்லியன் கிரயத்திலான 08 செயற்திட்டங்களில் ரூபா 120.4 மில்லியன் கிரயத்திலான 05 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறித்த செயற்திட்டங்களின் கீழ் தண்ணீர் வளங்களை பாதுகாக்கும் இலக்குடன் அருகில் வசிக்கின்ற குடும்பங்களிற்கு மலசல கூடங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டு இறுதி அளவில் பூர்த்தியாக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நடாத்தப்பட்ட கணக்காய்வு மாதிரி செவ்வையின் பிரகாரம், களுத்துறை மாவட்டத்தில் வல்லவிட்ட, புளத்சிங்கள மற்றும் பலிண்டநுவர பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்தில் ஒரு செயற்திட்டத்தில் ஏறத்தாழ 80 சதவீத வேலைகள் பூர்த்தியாக்கும் போது ஏற்பட்ட காணிப் பிரச்சனைகள் காரணமாக தாமதப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 3.5 பணம் விடுவித்தல் பிரச்சனையால் முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரஜா ஜல அபிமானி செயற் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட 09 செயற்திட்டங்களின் மாதிரி கணக்காய்வு செவ்வையின் பிரகாரம், நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு ரூபா 2,577,811 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | திஸ்ஸகோம புவுடு சமுதாய செயற்திட்டம் மற்றும் அலகொலதெனியா மல்லகல சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டம் என்பவற்றின் உரிய வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. சுடுகண்ட நீர் வழங்கல் செயற்திட்டத்திலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டிருந்தது. கொஸ்கேனா நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மதிப்பீடுகளில் அச்சிடலில் எழுத்துப்பிழைகள் இருந்ததுடன் அசுபினி சமுதாய நீர் வழங்கல் திட்டம், மாவத்தேகம கல்கொடேவத்த றண்டிய சமுதாய நீர் திட்டம், றவலம கல்லன்தர குடி நீர் திட்டம், எல்பிட்டிய குலன்கட்டுவ சமுதாய நீர் வழங்கல் திட்டத்தில் புலனாய்வு நடாத்துவதற்கும் அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களிற்கமைய விலைப்பட்டியல் அனுமதித்தல், சான்றுபடுத்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் என்பன செய்யப்பட வேண்டும். |

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை அரச நிதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் தாமதத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், 2015 முதல் 2018 வரையான ஆண்டுகளிற்கான செயலாற்றல் அறிக்கை 2022 மார்ச் 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2022 மார்ச் 08 இல் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை வரைவு நிலையில் இருந்தது. 2015 முதல் 2018 வரையான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதி திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இல. 14 இல் வழங்கப்பட்ட படிவத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியதுடன் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

## 3.7 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருநாகல், காலி, களுத்துறை, கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அமுலாக் கப்பட்ட சமுதாய நீர் செயற் திட்டங்களிற்காக நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் உபபாகங்கள் கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான நிறுவனங்களை கொள்வனவு செய்வதற்காக 7 பதிவு செய்யப்பட்ட வழங்குநர் களிற்கு திணைக்களத்தால் 2019 ஆகஸ்ட் 29 இல் கேள்வி கோரல் கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்ததுடன் கேள்வி திறக்கும் திகதியில் ஐந்து நிறுவனங்கள் கேள்வியை சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த கொள்வனவிற்காக உரிய பம்புகளின் விதப்புரைகள் முன்னரே திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பம்புகளின் விதப்புரைகள் முன்னரே தயாரிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவுகள் தொடர்பான விதப்புரைகள் முன்னரே தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திகதிகள், கொள்வனவை விளம்பரப்படுத்தும் வழி கேள்வி ஆவணங்களை விற்பனை செய்தல் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2.5.1(இ) ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வியை மூடுதல் மற்றும் தறத்தல் என்பவற்றினை நிர்ணயிக்கின்ற முதலாவது கூட்டத்தில் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுடன் உடன்பட வேண்டியிருந்ததுடன் இதன் பிரிவு (ஈ) இன் பிரகாரம் ஒப்பந்த ஆவணங்கள் பயன்படுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இதன்படி செய்யப்பட்டிருக்காததுடன் மேற்குறித்த மாவட்டங்களில் பம்புகள் கொள்வனவு செய்வதற்காக ஒரே தடவை கேள்விகள் கோராமல் காலத்திற்கு காலம் கேள்வி கோரல் செய்யப்பட்டிருந்தது. | வேண்டுகைகளின் பிரகாரம், காலத்துக்கு காலம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கொள்வனவு வழிகாட்டலுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொள்வனவு வழிகாட்டலின் 6.3.3. ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வி திறத்தல் குழு கொள்வனவு குழுவால் நியமிக்கப்பட்ட உத்தியோகத் தர்களைக் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், சொல்ப்பட்ட கொள்வனவிற்கான கேள்வி திறத்தல் குழு கேள்வி திறத்தல் தினத்தில் கொள்வனவு பணிப்பாளரால் அவருடைய சுய விருப்பில் நியமிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக கொள்வனவு பணிப்பாளர் உள்ளார் என கொள்வனவு குழுவால் குறிப்பிடப்பட்ட கேள்வி திறத்தல் குழு உதியோகபூர்வமாக அறிவித்திருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | கொள்வனவு வழிகாட்டலின் 4.3.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம், சகல கிரயங்களையும் உள்ளடங்கிய கிரய மதிப்பீடுகள் ஒட்டுமொத்த கொள்வனவால் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கண்டி மாவட்டத்தில் நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் உபபாகங்கள் கொள்வனவு தொடர்பில் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பாய்வு குழு அறிக்கை பிரகாரம், நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் உபபாகங்கள் கொள்வனவிற்காக அசாதாரண குறைந்த விலை உள்ளடக்கிய மதிப்பீடுகளை உரிய அலுவலர்கள் தயாரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் சொல்லப்பட்ட குழு அறிக்கை பிரகாரம் பொறியியலாளர் மதிப்பீடுகளிற்கும் கேள்வி விலைக்கும் இடையிலான முரண் 18 சதவீதம் முதல் 695 சதவீதமான உயர்ந்த வீதத்தில் இருந்தது | நாங்கள் மதிப்பீடுகள் தயாரிக்கையில் கேள்வியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வகை மற்றும் மாதிரி மற்றும் வகை மற்றும் மாதிரி வாரியாக தங்கியிருக்கும் விலைகள் என்பவற்றினை உள்ளடக்கியிருக்கவில்லை. | -மேற்படி- |
| (உ) | கொள்வனவு வழிகாட்டலின் 8.12.2(அ) ஆம் பிரிவின் பிரகாரம், விதப்புரைகள் மற்றும் ஏனைய உடன்பட்ட ஒப்பந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பற்றிற்கமைய வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென பூர்த்தியாக்கிய வேலை மீது சான்றுபடுத்தப்படுகின்ற பொறியியலாளர் அல்லது ஆலோசனையாளரால் பூர்த்தியாக்கல் சான்றிதழ் | நீரிறைக்கும் இயந்திரத்தின் மாதிரி மின்சாரம் வழங்கல் பிரச்சனைகள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகளின் வேண்டுகை காரணமாக மாற்றப்பட்டிருந்ததுடன் மேலதிக தொகைகளை சாட்டுதல் செய்யாமல் வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த வேலைத் தளங்களில் பொருத்தப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் | -மேற்படி- |

வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட சமுதாய நீர் செயற்திட்டங்களிற்காக பொருத்தப்பட்ட 07 நீரிறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், அந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் கொள்வனவு குழுவால் அனுமதிக்கப்பட்ட விதப்புரைகளிற்கமைய இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நீரிறைக்கும் இயந்திரம் வேண்டப்பட்ட மாதிரியில் உள்ளதென சிபார்சு செய்கின்ற மாவட்ட பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியலிற்காக வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் செய்யப்பட்ட கொடுப்பனவு காரணமாக திணைக்களம் ஏறத்தாழ ரூபா 1,109,750 ஆன நிதி நட்டத்தை ஏற்றிருந்தது.

உபபாகங்களின் விலைகள் எங்களால் வழங்கப்பட்ட விலைகளிற்கு சமமாக அல்லது உயர்வாக இருந்தன என்பது காணக்கூடியதாக உள்ளது.

(ஊ) கொள்வனவு வழிகாட்டலின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், குறைந்த கிரயத்தில் கூடிய நன்மைகள் பெற முடியும் என கொள்வனவு நடவடிக்கைகளின் மூலம் கொள்வனவுகளை செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 2021 பெப்ரவரி முதல் 2021 ஒக்தோபர் வரை 06 சந்தர்ப்பங்களில் திணைக்களத்திற்கு சொந்தமான 06 வாகனங்களிற்கு ரூபா 745,700 பெறுமதியான 25 டயர்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக ஒரே தடவையில் கேள்வி கோரலிற்குப் பதிலாக காலத்திற்கு காலம் கேள்வி கோருவதன் மூலம் நிறுவனங்களிலிருந்து கேள்வி கோரல் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன்படி, அந்த விலைகளிற்கிடையில்

ஒரே தடவையில் அவவை பெரிய இடத்தை கொண்டிருக்கும் என்பதால் வாகனங்களிற்கு டயர்களை போல வலுவான உபகரணங்களுக்கும் இந்த பிரச்சனை உள்ளது. எனவே, ஒரே தடவையில் கேள்வி கோரல் மற்றும் வாங்குதல் கடினமாக இருக்கும்.

-மேற்படி-

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 23,280 முதல் ரூபா 43,020 வரையான உயர்ந்த விலை முரண்கள் இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | கொள்வனவு வழிகாட்டலின் 2.3.1 ஆம் பிரிவு மற்றும் பிரஜா ஜல அபிமானி நீர் செயற்திட்டங்களிற்காக தயாரிக்கப்பட்ட வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் பயன்பாட்டு இடமாற்றங்கள் உள்ளடங்லாக காணிச் சுவீகரிப்பு மற்றும் தீர்க்கப்பட்ட இழப்பீடு, மீள்குடியேற்ற பிரச்சனைகள் மற்றும் செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கு இடையூறு அல்லாத ஏனைய விடயங்கள் போன்றன பூர்த்தியாக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது திஸ்ஸகம புவுடு சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் சுகத சமுதாய நீர் வழங்கல் திட்டம் என்பவற்றில் நிர்மாணிக்கப்பட்ட கிணறுகள், இறைக்கும் இல்லங்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் என்பன அமைந்துள்ள காணிகளின் சுவீகரிப்பு மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. | சமுதாய அடிப்படை அமைப்பகளிற்க சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு பிங்கிரிய பிரதேச செயலக செயலாளருக்கு அனுப்பப்பட்டது. சட்ட உரிமைகள் எடுத்த பின்னரே நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுலாக்குவது நடைமுறைச் சாத்தியமற்றிருந்தது. | -மேற்படி- |

**3.8 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமான ஓடும் நிலையிலுள்ள 02 வாகனங்கள் ஆனால் அவற்றினை | GX – 4232 இலக்கத்தை கொண்ட வாகனம் நிதியேற்பாடு இன்மையால் திருத்த | ஓடும் நிலையில் இருக்கின்ற வாகனங்களை பயன்படுத்தவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் நீண்ட காலமாக திணைக்கள வளவில் தரித்துநின்றமை அவதானிக்கப்பட்டது. | முடியாதிருந்ததுடன் 57–0016 இலக்க வாகனம் சேதமடைந்திருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தில் 02 குழும வாகனங்கள் மற்றும் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் ஒரு வாகனம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் சாரதிகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | இருபத்தி மூன்று (23) சாரதி வெற்றிடங்கள் உள்ளதுடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிற்காக சாரதிகள் ஒதுக்கப்பட்டிருந்தனர். | பயன்படுத்தக் கூடிய அந்த சகல வாகனங்களிற்கும் போதிய சாரதிகளை இணைக்க வேண்டும். |
| (இ) | 2021 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் 04 வாடகை வாகனங்கள் திணைக்களத்தின் கடமைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திற்கு உடமையான வாகனங்கள் அந்த காலத்தின் போது ஓடுவதற்காக பயனபடுத்தப் பட்டிருந்தது. அந்த வாடகை வாகனங்களிற்காக ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் முறையே ரூபா 837,890 மற்றும் ரூபா 901,020 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. | சாரதி பதவிகள் வெற்றிடம் நிலவியமையால் இரண்டு குழும வாகனங்கள் ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஓடும் நிலையில் இருக்கின்ற வாகனங்களை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பிரஜா ஜல அபிமானி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட ஆறு செயற்திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,115,690 பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் உபபாகங்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் மீளாய்வாண்டு இறுதிவரையும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | 03 செயற்திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் தற்போது பொருத்தப்பட்டிருந்தது. தனவெல குடிதண்ணீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் நாகோடை கப்பெட்டியாகொட நீர் செயற்திட்டம் என்பவற்றில் தண்ணீர் மீட்டர் பொருத்தல் தாமதப்பட்டிருந்தது. அசுபினி நீர் வழங்கல் செயற்திட்டத்தில் குழாய்கள் பொருத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் குறித்த நோக்கங்களிற்காக உடனடியாக பயன்படுத்த வேண்டும். |

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓடுவதற்காக மற்றும் திருத்த வேண்டியிருந்த மற்றும் கைதவிர்க்க வேண்டியிருந்த திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருக்காத 04 மோட்டார் | வாகனங்கள் வீதிக்கு அருகே தரித்திருந்தது, அவற்றினுடைய பாதுகாப்பு, பெறுமதி கருத்திற் கொள்ளப்பட்டே காப்புறுதி | பாவனையில் இல்லாத வாகனங்களை திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பதற்கு |

| | | |
|---|---|---|
| வாகனங்களிற்காக 2018 முதல் 202 வரையான ஆண்டுகளிற்காக காப்புறுதி கட்டணமாக ரூபா 263,228 ஆன தொகை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.10 முகாமைத்துவ திறமையீனங்கள்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலி மாவட்டத்திலுள்ள செயற் திட்டங்களிற்கு வெள்ள நிவாரண இழப்பீட்டிற்காக திணைக்கள ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 71,760 பெறுமதியான 5,230 மீற்றர் PVC குழாய்கள் 2019 நவம்பர் 10 இல் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு வழங்குநரால் சட்ட விரோதமாக கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர் வழங்கல் செயற்திட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப் பட்டிருக்காத இந்தக் குழாய் இருப்புகள் 2½ ஆண்டுகளிற்கு மேலாக சமுதாய அடிப்படை அமைப்பின் பொறுப்பில் இருந்தது ஆனால் மீளாய்வாண்டு இறுதி வரையும் திணைக்களத்திற்கு திரும்பபெறுவதற்கு திணைக்களத்தின் சிரேஸ்ர முகாமையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படி அமைப்புகளிற்கு குழாய் இருப்புகளை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. | அரசாங்க செலவினங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தவறாக பயன்படுத்துவதை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காலி மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட எல்பிட்டிய குலன்கட்ட குடி தண்ணீர் செயற்திட்டத்திற்காக தயரிக்கப்பட்ட 27 சதவீதத்தால் மதிப்பீட்டு தேவைகளை விஞ்சி ரூபா 788,006 பெறுமதியான வித்ததியாசமான டயா மீற்றர் PVC குழாய்கள் மற்றும் பொருத்திகள் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு கையளிக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், திணைக்களத்திற்கு திரும்ப பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலி மாவட்டத்தில் மிகையான குழாய்களை முறைப்படி அமைப்புகளிற்கு கையளிப்பதற்கு தேவையான அனுமதிகள் பெறப்பட்டிருந்தன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரஜா ஜல அபிமானி செயற்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட பத்தேகம் ஐகவியகண்ட சமுதாய நீர் வழங்கல் செயற்திட்டம், காலி அல்பிட்டய அம்பன சமுதாய நீர் செயற்திட்டம், நெலுவ நிதியவல சமுதாய நீர் செயற்திட்டம் மற்றும் கலன்டற சிசல சமுதாய நீர் செயற்திட்டம் என்பவற்றிற்கான குழாய்கள் பொருத்துதல் வேலைகளிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து தேவையான அனுமதிகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் பெறுவதற்கு தவறியிருந்தது | தவலம கல்லன்டர செயற் திட்டத்திலிருந்து ஒரு பகுதி குழாயிடல் வேலைகள் இன்னொரு செயற்திட்டதால் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் தொடங்குவதற்கு முன்னர் அவற்றினை அமுலாக்குவதற்கு தேவையான அனுமதிகள் உரிய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டும். |
| (ஈ) | பிரஜா ஜல அபிமானி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட அசுபினி சமுதாய நீர் செயற் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தேக்க கிணறில் போதிய நீர் அளவு இன்மையால் நீர்தேக்க கிணறிற்கு மாயோவிலிருந்து சட்ட விரோதமாக இறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரையும் நீர்ப் பாசனத் திணைக்களத்திலிருந்து தேவையான சட்ட அனுமதிகளை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்து மூல அனுமதி பெறுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அப்பகுதி மாவட்ட அலுவலக பொறுப்பதிகாரியால் கடிதம் முன்னளிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 இல் மோட்டார் வாகனத் திணைக்களம் 57-0015 இலக்கத்தை கொண்ட மோட்டார் வாகனத்தை கைதவிர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இது திருத்தக்கூடிய நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், 2021 நவம்பர் 31 வரையும் மோட்டார் வாகனத்தை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தை கைதவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்த முடியாத வாகனங்களை கைதவிர்க்க வேண்டும். |
| (ஊ) | மாவத்தகம கல்கொடேவத்த றண்டிய சமுதாய நீர் திட்டத்தின் கீழ் ஒரு குழாய் கிணறிலுள்ள தண்ணீர் உவர் நிலை காரணமாக குடிதண்ணீருக்கு பொருத்தமற்றதாக இருந்ததென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குருநாகல் பிராந்திய ஆய்வுகூடத்தால் 2019 நவம்ர் 20 இல் வழங்கப்பட்ட தண்ணீர் தர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் குடிப்பதற்கு முன்னர் சூடாக்குதல் அல்லது | தொட்டிக்கு இறைக்கும் தண்ணீர் தரம் பரீட்சிக்கத் தவறியமையால் குழாய் கிணறிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | பொது மக்களிற்கு விநியோகிக்கப்பட்ட குடி தண்ணீரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குளோரினிப்பட வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது. குளோரின் அகற்றல் பிரிவை நிர்மாணிப்பதற்கு செயற்திட்ட மதிப்பீட்டில் ரூபா 85,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இது கணக்காய்வு திகதி வரையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | நீர் வழங்கல் செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் தேக்கிவைத்தல் தொட்டிகள் வெளித்தரப்பினர் அவற்றினை மதிப்பிட முடியாதிருந்ததை போல பாதுகாப்பு மேவுகைகளை பயன்படுத்தி பாதுகாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் வத்தேகம கெயம்பியகன்ட குடி தண்ணீர் செயற்திட்டம், இமடுவ மயுரா குடி தண்ணீர் செயற்திட்டம் மற்றும் எல்பிட்டிய அம்பன பெகேசர குடி தண்ணீர் செயற்திட்டம் என்பவற்றின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் சேரிப்பு தொட்டிகளிற்காக எவ்வித மேவுகை பாதுகாப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டம் கட்டமாக செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்கவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கணக்காய்வு அதிகரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்களின் 133 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகள் மற்றும் பொறுப்பகளின் வெளிப்பாட்டில் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அமுலாக்குவதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப் பட்டிருந்ததுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் முறைப்படி நடைபெற வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் | அமைச்சரவையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் திணைக்கள கணக்காய்விற்கு நான் அமைச்சு செயலாளரிடமிருந்து அனுமதி பெறுவதற்கு குறிப்பிட்டிருந்தேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் நிதிப்பிரமாணங்கள் உன்பவற்றுடன் இணங்கி நடக்க வேண்டும். |

உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒதுக்கப்பட்டிருந்த பொதிலும் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிப்பதற்கும் அந்த பதவிக்காக உயர் மட்டத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் மற்றும் வினைத்திறனை உயர்த்தும் நோக்கில் இதனை திறனுடன் பேணுவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. மனிதவள முகாமைத்துவம்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் ஒவ்வொரு வகுதி ஊழியர்களின் கீழ் அனுமதின்னகப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் வெற்றிடங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. இது மொத்த அனுமதிக்கப்பட்ட பதவியணியின் 23 சதவீமான உயர்ந்த வீதமாக கணிப்பிடப்பட்டிருந்தது. | மாகாண பொதுச்சேவைகள் சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சிற்கு வெற்றிடங்களை நிரப்புவத்றகுரிய கடிதங்கள் முன்னளிக்கப்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை 2022 மே 22 இவ் நடைபெற இருந்தது. எதிர்காலத்தில் இருக்கின்ற வெற்றிடங்களை நிரப்புதல் சாத்தியமாக உள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் பொறியியலாளர் (சிவில்) பதவிக்காக 15 உத்தியோகத்தர்கள் அனுமதிக் கப்பட்டிருந்த போதிலும் 10 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இருக்கின்ற ஐந்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் ஒரு உத்தியோகத்தர் பல மாவட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தார். மேலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக 40 உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்ட போதிலும் நிரந்தர அடிப்படையில் எந்தவொரு உத்தியோகத்தரையும் சேர்க்கப்படாமல் 26 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது. | 26 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப் பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் நிரந்தர அடிப்படையில் சேர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (இ) களுத்துறை மாவட்ட பிராந்திய அலுவலகத்தில் நடாத்தப்படட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது, மாவட்ட அலுவலகங்களிற்கு இணைக்கப்பட்ட பொறுப்பதிகாரி, திணைக்கள அலுவலர் போன்ற பதவிகளுடையோருக்கு கடமைப் பட்டியல் மூலம் கடமைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சகல பொறுப்பதிகாரிகள் மற்றும் திணைக்கள அலுவலர்களிற்கு மாதிரி கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தது. | கடமைப் பட்டியல்கள் மூலம் சகல உத்தியோகத்தர்களிற்கும் முறையாக கடமைகள் ஒதுக்க வேண்டும். |